பேரூராட்சி அலுவலகம்
இலஞ்சி – **627 805**

ந.க.எண். 375/2021 நாள்.13.05.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தென்காசி மாவட்டம் இலஞ்சி முதல் நிலை பேரூராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-23 கீழ் அட்டவணையில் காணும் பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 30.05.2022ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணி வரை இப்பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இதனடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 31.05.2022ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை 3.30 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து பெற்றுக் கொள்ளப்படும்.

### நிபந்தனைகள்

1. முன் வைப்பு தொகை செயல் அலுவலர், இலஞ்சி முதல் நிலைபேரூராட்சி (D.D. in favour of Executive Officer, First Grade Town Panchayat, Ilanji) என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது இவ்வலுவலக செலுத்துச் சீட்டு மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி 31.05.2022 ஆம் தேதி மாலை 3.30 மணிக்கு ஆஜராயிருக்கும் ஒப்பந்தத்தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
3. டேவணித் தொகை செலுத்தாதவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளிகள் எவ்வித காரணம் காட்டாமலேயே நிராகரிக்க செயல் அலுவலருக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
5. குறைந்த தொகைக்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையின் போது எடுத்துக் கொள்ளப்படும்.
6. ஒப்பந்தப்புள்ளி தேதியை மாற்ற ஒத்தி வைக்க அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோர செயல் அலுவலர் அவர்களுக்கு அல்லது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
8. ஜாரியான ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து உடனடியாக வேலையை நல்ல முறையில் திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.
9. ஜாரியான ஒப்பந்தப்புள்ளிதாரர் அவ்வவ்போது செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஆலோசனைக்குட்பட்டு வேலையை நல்ல முறையில் திருப்திகரமாகவும் செய்து முடிக்க வேண்டியது.
10. பேரூராட்சி மன்ற பரிசீலனை முடிந்தபின் ஜாரியாகாதவர்களுடைய டேவணித் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.
11. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அளவுகள் பிரகாரம் வேலைகள் செய்து முடிக்காவிட்டால் பணம் பட்டுவாடா செய்யப்பட மாட்டாது.
12. ஜாரியானவர்களுடைய டேவணித் தொகையை தணிக்கை முடிந்த பின்பு தணிக்கையில் ஆட்சேபணையில்லையெனில் வட்டியின்றி திருப்பிக் கொடுக்கப்படும்.
13. ஒப்பந்தப்படி வேலை செய்து முடிக்காவிட்டால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் முதல் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார்.
14. இந்த ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள வேலைக்குரிய உடன்படிக்கை எழுதி முடித்ததும் வேலையை துவங்கி வேலை உத்திரவில் கண்டுள்ள கால வரம்பிற்குள் வேலையை முடிக்கப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் வேலையை முடிக்காவிடில் வேலை மதிப்புத் தொகையில் ரூ.100/– இக்கு பைசா 0.50 இக்கு மேற்படாமல் பேரூராட்சி செயல் அலுவலர் ஒப்பந்தக்காரர் மீது அபராதம் விதிக்கலாம். அவ்வாறு விதிக்கப்படும் அபராதத் தொகை சம்பந்தப்பட்ட வேலை பட்டியலிலோ அல்லது வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படும் பட்டியலிலோ அல்லது அவருக்கு சேர வேண்டியதாக உள்ள இதர தொகையிலிருந்தோ பிடித்தம் செய்யப்படும். மேலும் ஒப்பந்தக் கால வரம்பிற்குள் வேலையை செய்து முடிக்காத காரணத்தால் ஏற்படும் இழப்புகளுக்கு பேரூராட்சி

ஒப்பந்தக்காரர் மீது தாவா செய்யலாம். அபராதம் விதிக்கப்பட்ட பின்னரும் வேலை விரைவாகவும், தரமானதாகவும் செய்யப்படவில்லையென செயல் அலுவலர் கருதினால் ஒப்பந்த டேவணி பறிமுதல் செய்து பேரூராட்சி நிதிக்கு ஈடு செய்யப்படும். மேலும் வேறு ஒப்பந்தக்காரர் பொறுப்பில் மீதியுள்ள வேலையை இதர மூலப் பொருட்களைக் கொண்டு செய்து முடிக்க உத்திரவிட செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் அனைத்தும் ஒப்பந்தக்காரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

15. இதர விபரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## நமக்கு நாமே திட்டம் 2022-23 (நகர்புரம்)

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவ கிரையம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 15வது வார்டு ஐந்தருவி ரோட்டில் படகு குழாம் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 12.00 | 12000 | 6240 |

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
இலஞ்சி

**<u>பெறுநர் :–</u>**

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள்

**<u>நகல் :–</u>**

1. உதவி செயற் பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள், தென்காசி.
2. உதவிப்பொறியாளர், குற்றாலம் பேரூராட்சி.
3. அலுவலக விளம்பர பலகைக்கு.கோப்புக்கு